DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

Case No.STC.172/2025

Prosecution witness – PW.2

| | | |
|---|---|---|
| Name | :திரு.குருமூர்த்தி | Caste: |
| Father's Name | : முத்துராமலிங்கம் | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

25.05..2026 – 11.30 PM

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>:–

நான் கோட்டைமேட்டில் குடியிருந்து முஸ்ட குறிச்சி ஊராட்சி செயலாளராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 மற்றும் ஆஜர் எதிரியை தெரியும். அவர்கள் பழக்கமானவர்கள்தான். வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. நான் வழக்கு சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் அனுமதியளிக்கப்பட்டது)

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

நான் வழக்கு சம்பவம் நடந்தபோது சம்பவ இடத்தில் இருந்ததாகவும், சண்டையை நேரில் பார்த்து சண்டையை விலக்கி விட்டதாகவும், அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் அளித்தது பற்றியும் போலீசார் விசாரித்த போது சொல்லிவிட்டு எதிரி உறவினர் என்பதால் எதிரி கேட்டுக் கொண்டதன் பேரில் தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.25 18:46:56 +0530